செ.வெ.எண்-89 நாள்-28.02.2020

# அரியலூர் மாவட்டம், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், தாமரைக்குளம் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (28.02.2020) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தடுப்பு ஊசிகளை வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உள்ள **1,64,362** பசுவினம் மற்றும் **1,799** எருமையினம் உள்ளிட்ட **1,66,161** கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திடும் பொருட்டு, கால் மற்றும் வாய்நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 1-வது சுற்று தடுப்பூசி பணி இம்மாவட்டத்தில் **28.02.2020 முதல் 21** நாட்களுக்கு தொடர்ச்சியாக அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வு கிராமசபை 25.02.2020 அன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற்றது. அதில் தடுப்பூசியின் அவசியம் பற்றி கால்நடை மருத்துவர்களால் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மூன்று மாத வயதுடைய கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட அனைத்து பசு, எருமை மற்றும் காளை (எருது)களுக்கு இத்தடுப்பூசி கட்டாயம் போட்டுக்கொள்வது அவசியம் ஆகும்.

இத்திட்டத்திற்காக **1,46,700** டோஸ் தடுப்பு மருந்துகள் இதுவரை பெறப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பூசிப் பணிக்காக கால்நடை மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அடங்கிய **39** குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர்கள், ஆவின் மற்றும் மகளிர் திடத்தினருடன் இணைந்து கால்நடைகளுக்கு **100** சதவீதம் தடுப்பூசி பணி மேற்கொள்வதுடன் தடுப்பூசி போடும் பணி அடையாள அட்டை வழங்கி பதிவுகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் வசித்து வரும் விவசாய பெருங்குடி மக்களாகிய நீங்கள் நல்லமுறையில் கால்நடைகளை பேணிக்காத்து வளர்த்து வருகின்றீர்கள். கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால் மற்றும் வாய் நோய் என்கிற கோமாரி (கசப்பு) நோய். இந்நோய் மிக கொடிய வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் இக்கிருமியானது தண்ணீர் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் மிக விரைவில் பரவக்கூடியது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாயிலும், நாக்கிலும், கால் குளம்புகளுக்கிடையிலும் புண்கள் ஏற்படும். அவைகள் தீனி உட்கொள்ள முடியாமல் மிகவும் பாதிக்கப்படும். மிகவும் மெலிந்துவிடும். வெயில் காலத்தில், நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மூச்சிரைக்கும். தோலின் தன்மை கடினமாகவும், அடர்த்தியான ரோமமும் காணப்படும். பால் கறவை முற்றிலும் குறைந்துவிடும். கறவைப்பசுக்களில் பால் குடித்துவரும் கன்றுகள் உடனடியாக இறந்துவிடும். மலட்டுத்தன்மை ஏற்படும். கால்நடை வளர்ப்போர்க்கு மிக பெரிய பொருளாதார இழப்பு ஏற்படும்.

எனவே, கால்நடைகள் வளர்ப்போர் தங்கள் கிராமத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும்பொழுது 3 மாதம் வயதுள்ள கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடுகளுக்கும் தவறாமல் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போட்டு, தங்கள் கால்நடைச் செல்வங்களை இக்கொடிய நோய் வராமல் பாதுகாக்கும்படி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பொ.சந்திரசேகர், ஊராட்சிமன்றத்தலைவர் பிரேம்குமார், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் சரஸ்வதி, கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஹமீது அலி, துணை இயக்நுர் மரு.ரமேஷ், உதவி கால்நடை இயக்குநர் செல்வராஜ், கால்நடை மருத்துவர்கள் அலுவலர்கள் முருகேசன், கார்த்திக்கேயன், குமார், ஜெயசுந்தரி, ரெங்கசாமி, செல்வி, சேகர், ராஜா, வேல்முருகன் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமாப்பு உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

0

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**